னேஷன் இருக்கிறது என்றும் சொல்கிறார்கள். அந்தப் பிரச்னைகளை நீக்கக் கூடிய முறையில் வழி வகை காண வேண்டும் என்றால் புகையிலை தூள் பொட்டணம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைத்தால் ஏற்படும் என்கிற செயற்குறிப்பும் இருப்பதாகச் சொன்னேன். அப்படி ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தப்படுமேயானால், விவசாயிகளின் உற்பத்திப் பொருளுக்கு நல்ல விலை கிடைக்கும், சங்கமும் நஷ்டம் அடையாது, தொழிலாளர்களுக்கும் நல்ல ஊதியம் கிடைக்கும் என்கிற அடிப்படையில் தான் அரசு இதைப் பரிசீலிக்கும். அப்படிப்பட்ட நடவடிக்கையை அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் பதிவு செய்துக் கொண்டிருக்கும் விவசாயிகளே எடுக்க முன்வருவார்களேயானால் அரசு அதற்கு நிதி உதவி அளிக்க வேண்டிய தேவை ஏற்படும். மற்றும் பல காரணங்களினாலும் அரசு அதைப் பரிசீலிக்கும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் பகுதியிலே இருக்கிற புகையிலை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் தற்போது எத்தனை பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள், அந்தச் சங்கத்தினுடைய மூலதனம் என்ன ? இதிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற பணியாளர்கள் எவ்வளவு பேர் ? இப்பொழுது அதன் நிதி நிலைமை எந்த அளவில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சங்கத்திலே 760 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். 71,650 ரூபாயை அவர்கள் மூலதனமாக இச் சங்கத்தில் செலுத்தியிருக்கிறார்கள். அரசு இதில் 25,000 ரூபாய் மூலதனம் செலுத்தியிருக்கிறது. 1975-76 நீங்கலாக, 77-லிருந்து 80 வரை தொடர்ந்து இச்சங்கம் நட்டத்திலே தான் இயங்கிக் கொண்டு வருகிறது.

சத்யமேவ வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மதுராந்தகத்தில் புதிய நீதிமன்றங்கள்.

*வினா எண் 246 திரு.எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் முன்சீப் கோர்ட்டு அல்லது சப்-கோர்ட் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[1981 பிப்ரவரி 9

திரு. எஸ். டி. உகம்சந்த் : மதுராந்தகம் தாலூகா பெரிய தொரு தாலூகா. அந்தத் தாலூகாவில் 450 கிராமங்களில் ஏழை மக்கள், ஏழை விவசாயிகள் வாழ்கிறார்கள். அவர்கள் வழக்கு கள் நடத்த செங்கல்பட்டு செல்ல வேண்டியிருப்பதால் இந்தப் பிரச்னையை மீண்டும் அரசாங்கம் அனுதாபத்தோடு பரிசீலிக்கு குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நீதிமன்றங்கள் அதிகார வரம்புக் குழு இதுகுறித்து பரிந்துரை செய்யவில்லை. காரணம், மதுராந்தகம் பகுதியிலிருந்து ஏற்கனவே செங்கைப் பகுதிக்கு சென்றுகொண்டிருக்கிற வழக்குகளுக்கு தனியாக ஒரு துணை நீதிமன்றம் அங்கே அமைப்பதற்கு ஏற்றளவிற்கு சாத்தியக் கூறு இல்லை என்ற குறிப்பினை உயர்நீதிமன்றம் அரசுக்கு தந்திருக்கிறது. அதன் அடிப்படையில் இது தற்போது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதில்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மதுராந்தகத்திலிருந்து செங்கல் பட்டு செல்லவேண்டுமென்றால் மதுராந்தகம் தாலூகா கடைக் கோடியில் இருப்பவர்கள் நாற்பது மைல்கள் செல்ல வேண்டியிருப்பதால் பல வழக்குகள் கோர்ட்டுக்குப் போகாமலேயே கிராமங்களிலே மிராசுதாரர்கள் சொல்வதற்குட்பட்டு நடக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே மதுராந்தகத்தில் ஒரு சப்கோர்ட் அமைக்க வேண்டும் என்று அங்குள்ள மக்களிட மிருந்து கோரிக்கைகள் வந்துள்ளனவா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : 1973 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட அதிகார வரம்புக் குழு இதை பரிந்துரை செய்ய வில்லை. ஆனால் ஆண்டுகள் பல தற்போது ஆகிவிட்டதால் அந்தப் பகுதியிலிருந்து வருகிற வழக்குகளின் எண்ணிக்கையை வேண்டுமென்றால் மீண்டும் ஆய்ந்து அதன் அடிப்படையில் என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பதை உயர் நீதிமன்றத்தோடு கலந்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

சென்னையில் உள்ள கொத்தவால்சாவடி.

*வினா எண். 247—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

சென்னையில் உள்ள கொத்தவால் சாவடியை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது—